திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 0161/ஆ4/2022 நாள்: 22.01.2022

பொருள்: தேர்வுகள் – தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வுகள், மார்ச் 2022 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணத்தினை www.karuvoolam.tn.gov.in என்ற இணையதளத்தில் செலுத்த கோருதல் – சார்பாக.

பார்வை: 1. சென்னை–6, அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 000233/எம்.எம்.எம்.எஸ்/2022 நாள்: 12.01.2022 மற்றும் 21.01.2022.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்: 12.01.2022.

********

2022–ம் ஆண்டு மார்ச் 5–ல் நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் எட்டாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை 12.01.2022 முதல் 27.01.2022 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**<u>பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்:–</u>**

மேற்காண் தேர்விற்கு விண்ணப்பித்த எட்டாம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சார்ந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்னும் இணையதளம் மூலமாக 24.01.2022 பிற்பகல் முதல் 05.02.2022 வரை பதிவேற்றம் செய்ய அனைத்து வகை அரசு, அரசு உதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**<u>அறிவுரைகள்:–</u>**

1. கடந்த ஆண்டைப் போலவே இந்த வருடமும் EMIS– ன் அடிப்படையில் மாணவர்களின் பதிவு நடைபெறவுள்ளது. எனவே, பள்ளிகளுக்கான USER ID, PASSWORD– ஐ பயன்படுத்தி மாணவர்களின் EMIS எண்ணினை பதிவு செய்தவுடன் விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். புதியதாக பள்ளிகள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின் புதிய USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் .

**2. DGE Portal ல் பதிவேற்றம் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவரங்கள்:–**

• NMMS தேர்வுக்கு மாணவர்கள் தேர்வுக்கு மாணவர்கள் சமர்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் (மாணவரின் பெயர் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் எவ்வாறு இடம் பெற வேண்டுமோ அதன்படி) EMIS இணையதளத்தில் திருத்தம் ஏதேனும் இருப்பின் மாற்றிய பிறகு DGE Portal ல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

...2/–

• மாணவர் பெயர், தந்தை / பாதுகாவலர் பெயர், பிறந்த தேதி, ஆதார் எண், பாலினம், கைப்பேசி எண் போன்ற விவரங்கள் ஆதார் அட்டையில் உள்ள விவரங்கள் மற்றும் EMIS இணையதளத்தில் உள்ள விவரங்களுடன் ஒத்திருக்கவேண்டும்.

• மாணவரின் பெற்றோர் பயன்படுத்தும் நடைமுறையில் உள்ள கைப்பேசி எண்ணையே அளிக்க வேண்டும். உதவித் தொகை சார்ந்து அவ்வப்போது குறுஞ்செய்தி அல்லது கடவுச்சொல் (OTP) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணிற்கே அனுப்பப்படும் என்பதால் அக்கைப்பேசி எண்ணை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு மாற்றாமல் இருக்கவேண்டும்.

• திருப்பத்துூர் மாவட்டங்களைச் சார்ந்த பள்ளிகளில் பயின்று இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் தேர்வர்களுக்கு DGE Portal ல் திருப்பத்துூர் மாவட்டத்தினையே குறிப்பிடவேண்டும். ஒருங்கிணைந்த மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிடக்கூடாது.

**3.** தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரிதானா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**4.** மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் மாணவர்களிடமிருந்து பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**5.** பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.

**6.** வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.

**7.** பெற்றோரின் தொலைபேசி/கைப்பேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/கைபேசி எண்ணையே பதிய வேண்டும். பள்ளியின் தொலைபேசி என்ற கலத்தில் மட்டும் பள்ளியின் தொலைபேசி எண்ணினை பதிவு செய்தால் போதுமானது.

**8.** பதிவு செய்த விவரங்களை Declaration form Print out கொண்டு சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.

**9.** பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் இருப்பின் **05.02.2022** –க்குள் சரி செய்து கொள்ளலாம். அதன் பின் எந்த பதிவுகளும் கண்டிப்பாக மாற்ற இயலாது.

**10.** தேர்வு கட்டணத்தை ஒரு தேர்வருக்கு ரூ.**50/–** வீதம். www.karuvoolam.tn.gov.in இணையதளத்தில் இணைப்பில் உள்ள வழிமுறைகளின் படி ஆன்லைனில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவேற்றம் முடிந்தவுடன் Summary Report மற்றும் தேர்வுக் கட்டண விவரத்தினை (PAYMENT RECIEPT) (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) **வேலூர்–7, கல்புதூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 09.02.2022–**க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து வகை அரசு/அரசு நிதியுதவி /நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

| | | |
|---|---|---|
| விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம் | : | **24.01.2022 – 05.02.2022** |
| விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | : | **05.02.2022** |

…3/-

Summary Report மற்றும் தேர்வுக் கட்டண விவரத்தினை (PAYMENT RECIEPT) தொகையை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்: **09.02.2022.**

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும், புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பங்கள் உரிய இணைப்பு சான்றிதழ்களுடன் சர்ந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசம் வைத்துக்கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் மாணவர்களின் நலன் கருதி உரிய காலத்திற்குள் பணியினை முடித்துக்கொள்ளுமாறு அனைத்து வகை வகை அரசு/அரசு நிதியுதவி /நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு.
1. EMIS மூலம் பதிவேற்றம் செய்வதற்கான வழிமுறைகள்
2. தேர்வுக்கட்டணம் செலுத்தும் வழிமுறைகள்.

ஒம்/– 22.01.2022.
முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்.

பெறுநர்

அரசு/அரசு நிதியுதவி /நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்:–

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர்/வாணியம்பாடி – தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.

2. வட்டாரக்கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்டம் – தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.